**9.2.2015**

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காய்கறிகளை அள்ளித்தரும் மாடித்தோட்டம்**

புதுவையைச் சேர்ந்த ஒருவர் தனது வீட்டு மொட்டை மாடியில் காய்கறித் தோட்டம் அமைத்து பராமரித்து வருகிறார். விவசாய நாடான இந்தியாவில், விளை நிலங்களின் பரப்பு வெகுவாகக் குறைந்து வருகிறது. ஆனால், மக்கள் தொகை வேகமாகப் பெருகிவரும் சூழலில், உணவுப் பொருள், தானியம், காய்கறிகளின் தேவை பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் உணவுப் பொருள்களின் விலையானது ஏறுமுகத்தில் இருப்பதும், சாதாரண மக்களின் மாத பட்ஜெட்டில் இதற்காகப் பெரும் தொகையை செலவிட வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. இதனை நன்கு உணர்ந்துகொண்ட புதுவை உருளையன்பேட்டையைச் சேர்ந்த திருஞானசம்பந்தம், தனது வீட்டு மொட்டை மாடியில் 850 சதுர அடி பரப்பில் தோட்டம் அமைத்து காய்கறிக்கான செலவை மிச்சப்படுத்தி வருகிறார். இவர் ஓய்வு பெற்ற பஞ்சாலை ஊழியர் ஆவார். பச்சைக் காய்கறிகள்: இத் தோட்டத்தில் பீர்க்கங்காய், பரங்கி, சுரக்காய் மற்றும் கொம்பன் அவரை, பட்டை அவரை, பாகற்காய் என கொடிகளில் கொத்துக், கொத்தாய் காய்த்துத் தொங்குகின்றன. கத்தரிக்காய், தக்காளி, வெண்டைச் செடிகளுடன் சிவப்பு முருங்கை, பச்சை முருங்கை, சடை முருங்கை என்று 21 வகையான முருங்கைகளையும் வளர்த்து வருகிறார். ஒரே செடியில் 37 ரக வெள்ளைக் கத்தரிக்காய்கள் காய்த்துள்ளன. மேலும், துளசி, புதினா, சோற்றுக்கற்றாழை, கருவேப்பிலை போன்ற மூலிகைச் செடிகளுக்கும் பஞ்சமில்லை. செடிகளை புதுப்பிக்க வசதியாக தக்காளி, கத்தரி,

வெண்டை உள்ளிட்டச் செடிகளுக்கான விதைகளை விதைத்து, நாற்றுகளையும் பராமரித்து வருகிறார். பூத்துக் குலுங்கும் மலர்கள்: இங்கு குண்டுமல்லி, முல்லை, கனகாம்பரம், சிவப்பு ஊசி மல்லி, அலரி, செம்பருத்தி, அரிய வகையான பாரிஜாதம், சங்கு பூச்செடி உள்ளிட்ட மலர்களும் பூத்துக் குலுங்குகின்றன. கொய்யா, மனத்தக்காளி என்று வகை, வகையான காய், கனிச் செடிகளும் வளர்க்கப்பட்டுள்ளன. இது குறித்து திருஞானசம்பந்தம் கூறியது: இளம் வயதில் வேளாண் படிப்பை முடித்தேன். தனியார் ஆலையில் வேலை கிடைத்ததால் திசை மாறிவிட்டேன். இருந்தபோதும், விவசாயத்தின் மீதான எனது ஆர்வம் குறையவில்லை. ஆரம்ப காலத்தில் வீட்டின் பின் பகுதியில் தோட்டம் அமைத்திருந்தேன். கடந்த 4 ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்ற பின், வீட்டு மாடியில் தோட்டம் அமைத்தேன். இது எனது நீண்ட நாள் கனவு. மாடித் தோட்டத்தில் வீட்டுக்குத் தேவையான காய்கறிகள், பூக்கள், கனிகள் மன நிறைவாகக் கிடைக்கின்றன. அருகில் வசிப்போருக்கும் காய்கறிகளை இலவசமாக வழங்கி வருகிறேன். மாடித் தோட்டத்தை எளிதாகப் பராமரிக்க முடியும். மண்புழு உரம், சாணம் போன்ற இயற்கையான உரத்தை பயன்படுத்துவதால், பூச்சிக்கொல்லியின் தாக்கம் இல்லாத ஆரோக்கியமான காய்கறிகளை சுவைக்க முடிகிறது. இச்செடிகளுக்கு சிறிதளவு தண்ணீரே போதுமானது. மாடித் தோட்டம், சமையலுக்கு பயன்படுவதோடு வீட்டுக்கும் அழகு சேர்க்கிறது. ஓய்வு நேரத்தில் எனக்கு மன அமைதியைத் தருகிறது என்கிறார் அவர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## நெல் பயிரிடாத நிலங்களில் பச்சை பயறு சாகுபடி

பொன்னேரி: நெல் பயிரிடப்படாத நிலங்களில், விவசாயிகள், பச்சை பயறு பயிரிட்டு உள்ளனர். மீஞ்சூர் ஒன்றியம், அக்கரம்பேடு, வெள்ளம் பாக்கம், உத்தண்டிகண்டிகை உள்ளிட்ட இடங்களில், நிலத்தடி நீரின் உவர்ப்பு காரணமாக நெல் பயிரிடவில்லை.தற்போது அங்கு, பச்சை பயறு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டுள்ளனர். பனியின் ஈரப்பதம் இருப்பதாலும், மழை மற்றும் நிலத்தடி நீரின் தேவை அதிகம் இருக்காது என்பதாலும், தரிசாக கிடந்த நிலங்களில் பச்சை பயறு பயிரிடப்பட்டு உள்ளன. பயிரிடப்பட்டுள்ள பச்சை பயறு செடிகளில் பூக்கள் பூத்தும், பிஞ்சுகளும் வளரத் துவங்கிஉள்ளன. குறைந்த முதலீடு, குறைந்த பயிர்காலம் என்பதால், இதில் ஈடுபடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். ஒரு ஏக்கருக்கு, 8 - 10 கிலோ விதை பயறு விதைக்கப்படுகிறது. ஒரு கிலோ விதை பயறு, அரசு மானிய விலையில், 65 ரூபாய்க்கும்; சந்தை விலையில், 80 ரூபாய்க்கும் கிடைக்கிறது. விதைக்கப்பட்ட, 50 முதல் 60 நாட்களில், அறுவடை செய்யப் படுகிறது.இரண்டு முதல், நான்கு மூட்டை வரை பச்சை பயறு மகசூலும், சந்தை நிலவரத்திற்கேற்ப விலையும் கிடைக்கும். கடந்தாண்டு, 100 கிலோ மூட்டை ஒன்று, 6,000 ரூபாய் வரை கிடைத்தது. அதே போன்று விலை இருக்கும் என்ற நம்பிக்கையில், தரிசாக கிடந்த நிலங்களில் பச்சை பயறு பயிரிடப்பட்டு உள்ளது.

## ரூ.11 லட்சம் மதிப்பில் வேளாண் பொருள் விற்பனை

கோபி : கோபி, வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 11 லட்சம் ரூபாய்க்கு வாழைத்தார்கள் மற்றும் தேங்காய்கள் ஏலம் போனது. கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், ஒவ்வொரு வாரமும், புதன் மற்றும் சனிக்கிழமைகளில் ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், மொத்தம், 9,000 வாழைத்தார் வரத்தானது. கதளி ஒரு கிலோ, 40 ரூபாய்க்கும், நேந்திரம், 21 ரூபாய்க்கும் விலை போனது. செவ்வாழை தார், 650 ரூபாய்க்கும், ரொபஸ்டா, 400 ரூபாய், தேன்வாழை, 580 ரஸ்தாளி, 350 ரூபாய், மொந்தன், 320 ரூபாய், பூவன், 350 ரூபாய், பச்சைநாடான், 300 ரூபாய்க்கு விலை போனது. விற்பனைக்கு வந்த அனைத்து தார்களும், மொத்தம், 10 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. இதேபோல், தேங்காய் ஏலம் நடந்தது. மொத்தம், 8,000 தேங்காய்கள் வரத்தானது. ஒரு தேங்காய், 8 முதல், 20 ரூபாய் வரை விலை போனது. அனைத்து தேங்காய்களும், ஒரு லட்சத்துக்கு விற்பனையானது.

## வேதாரண்யத்தில் மானாவரி நெல் அறுவடை தீவிரம்

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த தலைஞாயிறு அருகே வெள்ளப்பள்ளம், கோவில்பத்து, தாமரைப்புலம், நாலுவேதபதி போன்ற கிராமங்களில் மானாவரி சாகுபடியாக, ஆயிரம் ஹெக்டரில், சம்பா நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது மழையும், அதிக வெப்பத்தையும் தாங்கி வளரக்கூடிய ஆடுதுறை 43, ஆடுதுறை 45, மதுரை 5, டி.கே.எம் 9, போன்ற நெல் ரகங்கள் இப்பகுதியில் பயிரிடப் பட்டுள்ளன. வெள்ளப் பள்ளம் பகுதியில், ஆடுதுறை 45 என்ற ரக நெல் பயிரிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பருவ மழை, இடைவெளி விட்டு சீராக மழை பெய்ததால், வெள்ளப்பாதிப்பின்றி விளைச்சல் அதிகரித்துள்ளது தற்போது, நெல்

அறுவடை துவங்கியுள்ள நிலையில், ஆடுதுறை 45 என்ற ரக நெல் மகசூல் அதிகம் கிடைக்கும், என விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கால்நடைகளுக்கு தேவையான வைக்கோல் கிடைக்கும் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## <u>வேர்க்கடலை அறுவடை தீவிரம்</u>

அவலூர்பேட்டை: கிராமங்களில் வேர்க்கடலை அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள பெரும்பாலான கிராம பகுதிகளில்கார்த்திகை மாதத்தில் இரைப்பு பயிராக வேர்க்கடலை விதைத்தனர். விவசாயிகள் தற்போது அறுவடை பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். மூன்று மாத பயிரான வேர்க்கடலையை அறுவடை செய்வதற்காக சில இடங்களில் ஓரளவிற்கு நிலப்பகுதி ஈரத்தன்மையுடன் உள்ளது. மானாவரி பயிரிட்டவர்களும் அறுவடை செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தற்போது அதிகளவு சாகுபடி இல்லை என்றாலும், கடந்தாண்டு அறுவடை நேரத்தில் மண்ணில் ஈரத்தன்மையே இல்லாத நிலை இருந்தது. வேர்க்கடலை பயிர் விளைச்சல் குறைந்திருந்தாலும், வேர் கொடிகள் மாடுகளுக்கு நல்ல தீனியாக உள்ளது .

## <u>ரூ. 14 லட்சம் மஞ்சள் ஏலம்</u>

ஆத்தூர் : ஆத்தூர், வேளாண் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த ஏலத்தில், 300 மூட்டை மஞ்சள், 14 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண், உற்பத்தியாளர்கள் கூட்டுறவு, விற்பனை சங்கத்தில், நடந்த மஞ்சள் ஏலத்தில், திருவண்ணா மலை, கடலூர், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த, 120 விவசாயிகள் விளைவித்த, 300 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.இதில், விரலி மஞ்சள் குவிண்டால், 6, 000 முதல் 9, 699 ரூபாய் வரை, உருண்டை

மஞ்சள் குவிண்டால், 4, 000 முதல் 8, 709 ரூபாய் வரை விற்பனை யானது. ஏலத்தில், 12 வியாபாரிகள் கலந்து கொண்டு, 300 மூட்டை மஞ்சளை, 14 லட்சம் ரூபாய்க்கு வாங்கி சென்றனர்.

## மிளகாய் விளைச்சல் அமோகம்

பரமக்குடி : பரமக்குடி அருகே புதுக்குடி கிராம விவசாயிகள் குண்டு மிளகாய் விதைகளை, ஒரு கிலோ ரூ.120 க்கு வாங்கி, புரட்டாசி மாதத்தில் விதைத்தனர். தொடர்ந்து 2 முறை மழை பெய்ததால் செடிகள் நன்கு வளர்ந்தது. தற்போது ஒவ்வொரு செடியிலும் மிளகாய்கள் காய்த்து, அறுவடைக்கு தயாராக உள்ளது. இவை ஏக்கருக்கு 50 மூடைகள் வரை கிடைக்கும் என விவசாயிகள் எதிர் பார்த்துள்ளனர். இதுகுறித்து விவசாயி கள் கூறுகையில்,"கடந்த ஆண்டு அதிக பட்சமாக ஒரு கிலோ மிளகாய் 210 ரூபாய் வரை விற்றது. இந்த ஆண்டு அதே விலை கிடைக்கும் பட்சம், கடந்த 3ஆண்டுகளாக வறட்சியால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்ட முடியும், என்றனர்.

## இலவச பந்தல் காய்கறி வளர்ப்பு பயிற்சி

நாமக்கல் : பந்தல் அமைத்து, காய்கறி வளர்த்தல் குறித்த இலவச பயிற்சி, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 19ம் தேதி நடக்கிறது. திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின், வேளாண் அறிவியல் நிலையத்தில், பண்ணையாளர் மற்றும் விவசாயிகள், மகளிர் குழுக்கள், பெண்கள் ஆகியோர், பந்தல் அமைத்து காய்கறிகளான பாகல், பீர்க்கங்காய், புடல் சாகுபடி குறித்த, ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, வரும், 19ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது.இதில், மண் பரிசோதனை அவசியம், கொடி வகை காய்கறி ரகம், பருவம், விதையளவு, விதை நேர்த்தி, பயிர் இடைவெளி, உர மேலாண்மை,

நுண்ணூட்ட மேலாண்மை, நீர்வழி உரமிடல், சொட்டு நீர் பாசனம், களை நிர்வாகம், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் தடுப்பு குறித்த பயிற்சி வழங்கப்படும்.மேலும், விபரங்களுக்கு, 04286 - 266 345, 266 244 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு, வரும், 18ம் தேதிக்குள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

**உணவு உற்பத்தியை சமன்படுத்த மக்காச்சோளம் பயிரிட அழைப்பு**

காரைக்குடி : கல்லல் ஒன்றியத்தில் தாமதமாக தொடங்கிய மழையினால், முழு அளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படவில்லை. தேவையான உணவு உற்பத்தியை சமன்படுத்திட நெல் சாகுபடி பரப்பிற்கு ஈடாக தண்ணீர் ஆதாரம் உள்ள நிலத்தில் மக்காச்சோளம் பயிரிட விவசாயிகள் முன் வர வேண்டும் என கல்லல் வேளாண்மை உதவி இயக்குனர் கணேசன் கேட்டுக்கொண்டுள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில்: மக்காசோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு, விதை முதல் அனைத்து தொழில் நுட்பங்களும் வழங்கப்படும். அறுவடைக்கு பின்னர் சோளத்தை நல்ல விலைக்கு விற்பனை செய்ய தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விதையளவு: 12.5 மெட்ரிக் டன் மட்கிய குப்பையை சீராக பரப்பி, அதனுடன் 2 கிலோ அசோஸ்பைரில்லம் இட்டு, உழவு பணி மேற்கொள்ளவும். வீரிய ஒட்டு ரகம் பயன்படுத்தும்போது, ஏக்கருக்கு ஏழு கிலோ விதை பயன்படுத்த வேண்டும். பயிர் இடைவெளி வரிசைக்கு வரிசை 60 செ.மீ., மற்றும் செடிக்கு செடி 25 செ.மீ., இடைவெளியில் பராமரிக்கவும். 4 செ.மீ., ஆழத்தில் விதைக்கவும். குழிக்கு ஒரு விதை விதைத்தால் போதுமானது. இடைவெளியில் களையினை கட்டுப்படுத்த, உளுந்து விதைப்பு செய்து கூடுதல் வருமானம் பெறலாம். இரண்டு விதை விதைக்கும்போது, 15 நாட்கள் கழித்து நல்ல செடிகளை விட்டு, மற்றொரு செடியை அகற்றிடலாம். 30-ம் நாள் ஒரு முறை களை எடுத்து, செடியின் தூரில் மண் அமைக்க வேண்டும். விதைத்த 25-ம் நாள் பாதியளவு தழைசத்தும்,

45-ம் நாள் மீதமுள்ள தழைசத்தையும் இட வேண்டும். 15 நாளுக்கு ஒரு முறை நீர் பாசனம் மேற்கொள்ளலாம். மானியம்: மக்காச்சோளம் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகளுக்கு, வீரிய ஒட்டு ரக விதை முழு மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. விபரம் தேவைப்படுவோர், கல்லல் வேளாண்மை அலுவலகத்தை அணுகலாம், என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**டெல்லியில் 'நிதி ஆயோக்' முதல் கூட்டம்: பம்பை-வைப்பாறு நதியை இணைப்பதை முதல் கட்டமாக நிறைவேற்ற வேண்டும் பிரதமருக்கு, தமிழக முதல்-அமைச்சர் கோரிக்கை**




பம்பை-அச்சன்கோவில் நதிகளை, தமிழகத்தில் ஓடும் வைப்பாறு நதியுடன் இணைக்கும் திட்டத்தை முதல் கட்டப்பணியாக மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம்கோரிக்கைவைத்துள்ளார்.

முதல்கூட்டம்

பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் டெல்லியில், 'நிதி ஆயோக்' அமைப்பின் முதல் கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில், தமிழக முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு பேசியதாவது:- இந்த வரலாற்று சிறப்புமிக்க கூட்டத்தில் கலந்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். மத்திய திட்டக்கமிஷனை, நிதி ஆயோக் என்று மாற்றி அமைப்பது தொடர்பாக 2 மாதங்களுக்கு முன்பு நடந்த கூட்டத்தில், தமிழக அரசின் சார்பில் பல கருத்துக்களும், ஆலோசனைகளும்

தெரிவிக்கப்பட்டது.

கருத்துக்களைகேட்கவேண்டும்.

எனவே நிதி ஆயோக் ஒரு வழிப்பாதை போல், மத்திய அரசிடம் இருந்து மாநில அரசுக்களுக்கு நிதி தொடர்பான கருத்துக்களை தெரிவிக்காமல், மாநில அரசின் கருத்துக்களை கேட்டு முடிவுகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிதி ஆயோக் நிதி ஒதுக்கீட்டு நடவடிக்கை மேற்கொள்ளும்போது, அவற்றின் செயல்பாடுகள் வெளிப்படையாகவும், பாரபட்சமற்ற முறையிலும் இருக்க வேண்டும். தேசத்தின் வளர்ச்சி என்பது மாநிலங்களின் பங்களிப்பு மற்றும் வளர்ச்சியின் அடிப்படையில் அமைகிறது என்பதால், மாநில அரசின் கருத்துக்களை கேட்பது அவசியமாகும்.

நிதியுதவி

கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் அதிக கவனம் செலுத்தி நிதி ஒதுக்க வேண்டும். திட்டங்களில் மாநில அரசின் பங்குகள் 25 சதவீதம் மிகாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், மாவட்ட அளவிலான நல திட்டகளுக்கான நிதியினை, மாநில அரசின் வழியாகத்தான் செல்ல வேண்டும். குறிப்பாக, நிலநிதிகளை வங்கிக் கணக்கு மூலம் பெறும் நபர்களுக்கு, அந்த நிதியுதவி மாநில அரசு வழியாக செல்வதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

நதிகள்இணைப்பு

கங்கையை சுத்தப்படுத்தும் மத்திய அரசு திட்டம், நிதி நீர் திட்டங்களுக்கு எல்லாம் முன்னோடியாக திட்டமாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதேநேரம், கங்கை-காவிரி இணைக்கும் திட்டத்தை விரைவு படுத்த வேண்டும் என்றும் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு-பாலாறு-காவிரி ஆகிய நதிகளை இணைக்கும் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்றும் தண்ணீர் பற்றாக்குறையுள்ள மாநிலங்களின் சார்பில் பிரதமருக்கு வேண்டுகோள் வைக்கிறேன். மேற்கு நோக்கி ஓடும் பம்பை, அச்சன்கோவில் நதிகளை, தமிழகத்தில் உள்ள வைப்பாறு நதியுடன்

இணைக்கும் தீபகற்ப நதிகள் அபிவிருத்தி திட்டத்தையும் முதல் கட்டப்பணியாக விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கோரிக்கைகளை எல்லாம், தண்ணீர் பற்றாக்குறையுள்ள மாநிலங்களின் சார்பில் பிரதமருக்கு வேண்டுகோள் வைக்கிறேன்.

செல்போன்நிறுவனம்

தமிழகத்தில் தொழில் முதலீடுகளை பாதிக்கும் சில விஷயங்களை தங்களது கவனத்துக்கு கொண்டு வரவிரும்புகிறேன். அதாவது, முன்தேதியிட்டு அமல்படுத்தப்பட்டுள்ள, 2012-ம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தினால், தமிழகத்தில் உள்ள பிரபல செல்போன் நிறுவனம் இழுத்து மூடப்பட்டுள்ளது. தமிழகத்தில் ‘எலக்ட்ரானிக்’ தொழிற்சாலைகளின் முதலீடு அபரிமிதமாக உள்ளது. ஆனால், வருமான வரி தொடர்பான நடவடிக்கையினால், இதற்கு பாதிப்பு வருகிறது. எனவே இதுதொடர்பாக தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## <u>திருச்செங்கோட்டில் ரூ.90 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்</u>



திருச்செங்கோட்டில் 2 ஆயிரம் மூட்டை மஞ்சள் ரூ.90 லட்சத்துக்கு ஏலம் போனது.

மஞ்சள்ஏலம்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்முடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய இடங்களில் இருந்து விவசாயிகள் 1,200 மூட்டை மஞ்சளை

விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் இருந்து 35-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்து இருந்தனர்.

ரூ.90லட்சத்துக்குவிற்பனை

இந்த ஏலத்தில் விராலி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.6 ஆயிரத்து 769 முதல் ரூ.8 ஆயிரத்து 889 வரையும், கிழங்கு ரகம் ரூ.6 ஆயிரத்து 698 முதல் ரூ.8 ஆயிரத்து 59 வரையும், பனங்காளி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.9 ஆயிரத்து 899 முதல் ரூ.16 ஆயிரத்து 9 வரையும் விற்பனை செய்யப்பட்டது. மொத்தம் 2 ஆயிரம் மூட்டை மஞ்சள் ரூ.90 லட்சத்துக்கு ஏலம் போனதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விவசாய தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பது அவசியம் கலெக்டர் மதிவாணன் அறிவுறுத்தல்



வக்ராநல்லூரில் நடந்த விழாவில் கலெக்டர் மதிவாணன் விவசாயி ஒருவருக்கு சான்றிதழ் வழங்கியபோது எடுத்தபடம்.

விவசாயிகள், பருவ சூழலுக்கு ஏற்ப விவசாய தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பது அவசியம் என கலெக்டர் மதிவாணன் அறிவுறுத்தி உள்ளார்.

சான்றிதழ்வழங்கும்நிகழ்ச்சி

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி, வலங்கைமான், கொரடாச்சேரி, குடவாசல், திருத்துறைப்பூண்டி, முத்துப் பேட்டை, நீடாமங்கலம் ஆகிய 6 வட்டாரங்களில் தலா 5 கிராமங்களை தேர்வு செய்து, அந்த கிராமங்களை சேர்ந்த 20 விவசாயிகளுக்கு பருவநிலை முன்அறிவிப்பை புரிந்து கொள்ளுதல் தொடர் பான பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற விவசாயிகள் கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கும், காரைக்கால் வேளாண்மை கல்லூரிக்கும் அழைத்து செல்லப்பட்டனர்.

அங்கு வானிலை ஆய்வுக்கு பயன் படுத்தப்படும் கருவிகளின் செயல்பாடு குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. பருவநிலை முன்அறிவிப்பு தொடர்பான பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கும் விழா கூத்தாநல்லூர் அருகே உள்ள வக்ராநல்லூர் ஏ.எம்.இசட். விவசாய பண்ணையில் நடந்தது. விழாவில் மாவட்ட கலெக்டர் மதிவாணன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி ஆகியோர் விவசாயிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினர். விழாவில்கலெக்டர்கூறியதாவது:-

தொழில்நுட்பங்கள்

கால நிலை பேரிடர் மேலாண்மை உழவர் வயல் வெளி பள்ளியில் பயிற்சி பெற்ற விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள சக விவசாயிகளுக்கு, பருவ நிலை மற்றும் பருவ நிலைக்கு ஏற்ற பயிர்கள் குறித்த விவரங்களை தெரிவிக்க வேண்டும். பருவகால சூழலுக்கு ஏற்ற விவசாய தொழில் நுட்பங் களை கடைப்பிடிப்பது அவசியம். இது அதிக மகசூல் பெற வழிவகை செய்யும். இவ்வாறு கலெக்டர் கூறினார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி கூறியதாவது:-

வழிமுறைகள்

பருவகால சூழ்நிலையை முன்கூட்டியே துல்லியமாக கண்டறிந்து விவசாயிகளுக்கு தெரிவிப்பதற்கான ஏற்பாடுகள் வேளாண்மை பல்கலைக்கழகத்தில் செய்யப் பட்டுள்ளது. கால சூழ்நிலைக்கு ஏற்ப செயல்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து முன் கூட்டியே அறிவிப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இவற்றை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். விழாவில் மாவட்ட வருவாய் அதிகாரி மோகன் ராஜ், வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், கூட்டுறவு சங்க இணை பதிவாளர் ரவிச்சந்திரன், மன்னார்குடி உதவி கலெக்டர் செல்வசுரபி, நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சோழன் ஆகியோர் முன்னிலை வகித்த னர். தஞ்சாவூர் சூழ்நிலையியல் ஆராய்ச்சி மைய

செயலாளர் பழனியப்பன், கோவை வேளாண்மை பல்கலைக்கழக தொழில் நுட்ப குழு உறுப்பினர் ரெங்கநாதன், வக்ராநல்லூர் ஊராட்சி தலைவர் துரைராஜ், துணை தலைவர் சேக்அப்துல் காதர் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக வக்ராநல்லூர் ஏ.எம்.இசட். விவசாய பண்ணையின் நிறுவனர் ஏ.எம்.இசட்.ஜியாவுதீன் வரவேற்றார். முடிவில் தஞ்சாவூர் சூழ்நிலையியல் ஆராய்ச்சி மைய வேளாண்மை வல்லுனர் கலைவாணன் நன்றி கூறினார்.

**<u>பிரம்மதேசம் அருகே சொட்டு நீர் பாசன முறையில் மணிலா சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்</u>**



பிரம்மதேசம், பிரம்மதேசம் அருகே சொட்டு நீர் பாசன முறையில் மணிலா சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>சொட்டுநீர்பாசனத்தில்மணிலா</u>

திண்டிவனத்தை அடுத்த பிரம்மதேசம் மற்றும் அதனை சுற்றியுள்ள எண்டியூர், ஓமந் தூர், ஆலங்குப்பம், ஆலந்தூர், கந்தாடு, அனுமந்தை, கூனி மேடு, கீழ்புத்துப்பட்டு, நடுக் குப்பம் உள்பட சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவ சாயிகள் அதிகளவில் மணிலா (நிலக்கடலை) சாகுபடி செய் துள்ளனர். குறிப்பாக சொட்டு நீர் பாசன முறையில் மணிலா பயிர் செய்வதில் விவசாயிகள் மிகுந்த ஆர்வம் கொண் டுள்ளனர். இவ்வாறு பயிரிடப்பட்ட மணிலாக்கள் தற்போது நன்கு வளர்ந்து வருவதால் விவசாயி கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், பருவமழை யானது போதிய அளவிற்கு பெய்யாத காரணத்தால் பிரம்மதேசம் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் தற்போது பெருமளவு குறைந்துள்ளது. அதனை கருத்தில் கொண்டு என்னை போன்ற விவசாயிகள் பலரும் தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்க முன்எச்சரிக்கை நடவடிக்கை யாக சொட்டுநீர் பாசன முறையை பயன்படுத்தி மணிலா பயிர் செய்துள்ளனர். மேலும்

இந்த முறையை பயன்படுத்தி மணிலா பயிர் செய்ய விவசாயிகள் பலரும் முன்வந்தனர். ஆனால் அவர் களுக்கு தேவையான உதவி களை வேளாண்மை துறை அதிகாரிகள் செய்ய வில்லை. இதன் காரணமாக விவசாயி கள் பலரும் ஏமாற்றம் அடைந் துள்ளனர். மருந்து, விதை, உரம் ஆகியவற்றின் விலை உயர்வால் மணிலா உற்பத்தி செலவானது எங்களுக்கு அதிகரித்துள்ளது. எனவே மணிலா விலையானது அதி களவில் உயர்ந்தால் தான் எங்களுக்கு சிறிது லாபம் கிடைக்கும் என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

**புடலங்காய் வரத்து அதிகரிப்பு கிலோ ரூ.6க்கு விற்பனை**

பொள்ளாச்சி, : பொள் ளாச்சி மார்க்கெட்டுக்கு புடலங்காய் வரத்து அதிகரிப்பால், விலை குறைந்துள்ளது. ஒரு கிலோ ரூ.6க்கு விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். பொள்ளாச்சி சுற்றுவட் டார கிராமங்களில் தக் காளி, வெண்டை, சோளம், நிலக்கடலை, தட்டைப்பயிர், பச்சைமிளகாய், பூசணி, கத்தரி மற்றும் பந்தல் காய்கறிகளான புடலங்காய், பாகற்காய் உள்ளிட்ட பல காய்கறிகள் விதைக்கப்படுகிறது. இதில் கிராமங்களில் பல விவசாயிகள் பந்தல் காய்கறியான புடலங்காய் விதைப்பில் அதிகம் ஆர்வம் கட்டுகின்றனர். சுற்றுவட்டாரத்தில் வடக்கிபாளையம், நெகமம், கோமங்கலம், கோட்டூர், சமத்தூர், ராமபட்டினம், கோபாலபுரம், சூலக்கல், கோவில்பாளையம், நல்லிக்கவுண்டன்பாளையம், மண்ணூர் உள்ளிட்ட கிராம பகுதிகளில் புட லங்காய் அதிகளவு விதைக்கப்படுகிறது. விதைப்பு பணி முடிந்து குறிப்பிட்ட மாதங்களில் விளைச்சல் அதிகரித்தவுடன் அறுவடை செய்யப்பட்டு மார்க்கெட்டுக்கு மொத்த விற்பனைக்கு புடலங்காய் கொண்டு வரப்படுகிறது. இந்நிலையில் கடந்த ஆண்டில் பருவமழையை

எதிர்நோக்கி விதைக்கப்பட்ட புடலங் காய் தற்போது, நன்கு விளைந்து காணப்படுகிறது. நல்ல விளைச்சலுடன் கூடிய புடலங்காயை விவசாயிகள் அறுவடை செய்து, மார்க்கெட்டுக்கு கொண்டு வர ஆரம்பித்துள்ளனர். இதனால் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக மார்க்கெட்டுக்கு புடலங்காய் வரத்து வழக்கத்தை விட அதிகரித்துள்ளது. இதில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு ஒரு கிலோ புடலங் காய் ரூ.18 முதல் ரூ.22 வரை விற்பனை செய்யப்பட்டிருந்தது. தற்போது வரத்து அதிகமாக உள்ள தால் ஒரு கிலோ ரூ.6க்கும் (மொத்த விலை), சில்லரை விலைக்கு ரூ.8க்கும் விற்ப னை செய்யப்படுகிறது என வியா பாரிகள் தெரிவித்தனர்.

**<u>நீர்நிலை ஆதாரங்களை பாதுகாக்க மழைநீர் சேகரிப்பு கட்டாயம்</u>**

கரூர், : பொதுப்பணித்துறை (ஆற்றுப்பாதுகாப்புக் கோ ட்டம்) மூலம் நீர்நிலை ஆதாரரங்களை பாதுகாப்பது குறித்து விவசாயிகளுக்கு ஒருநாள் கருத்துப் பட்டறை நிகழ்ச்சி கலெக்டர் ஜெய ந்தி தலைமையில் நடைபெற்றது. விவசாயிகளுக்கு வழிகாட்டி கையேடு வழங்கி கலெக்டர் பேசியது: கரூர் மாவட்டத்தில் கரூர், குளித்தலை, கிருஷ்ணராயபுரம் ஆகிய பகுதிகளில் பொதுவாக நீர்நிலைஆதாரம் சீராக உள்ளது. க.பரமத்தி, அரவக்குறிச்சி, கடவூர் பகுதியில் நீர்நிலை ஆதாரம் குறைவாக உள்ள து. இதுபோன்று வெ வ் வேறு விதமான சூழ்நிலை யை கொண்ட இப்பகுதிகளி நீர்நிலைகளில் மழை க்காலங்களில் தண்ணீரைதேக்கி வைத்து பயன்படுத்த மழைநீர்சேகரிப்பு திட்ட த்தை செயல்படுத்தவேண் டும். கடந்த ஆண்டு அனை த்து ஊராட்சிகளிலும் ஊரகவேலை உறுதி திட்டத்தின்கீழ் பண்ணை குட் டைகள் அமைக்கப் பட்டு அதன்பயனாக நடப் பாண் டில் பெய்த மழையின்போ து தேவையான அளவு தண்ணீர் தேக்கி விவசாயத்திற்கு பயன்பட்டது. எவ்வாறு தண்ணீரை பாதுகாத்து பயன்படுத்த முடியும் என்பதை எடுத்துக்கூறுவதை கேட்டு பிறருக்கும் தெரிவிக்கவேண்டும். எவ்வகையான பயிர் பயிரிடலாம் என திட்டமிட்டு அதற்கேற்ப

தண்ணீரை பயன்படுத்தி உற்பத்தி திறனை அதிகரித்து பொருளாதார முன்னேற்றம் பெறவேண்டும். நவீன தொழில்நுட்பத்துடன், பாரம்பரியமாக நிலவும் நீர்பாதுகாப்பிற்காக கண்டறியும் நடைமுறைகளை இணைத்து நீர்பாதுகாப்பு அதிகரித்தல், நீர்காப்பு, பயன்பாடு இவைகளுக்கு பாரம்பரிய ஆதாரத்தை புதுப்பிக்க வேண்டும். கட்டுமானங்கள் மூலம் மேலும் வசதியான நிலை ஏற்படுத்துவது, வடிவமைக்கப்பட்ட பகுதி நிலைகளுக்கு குறைவாக இயங்கும் திட்டங்களை மறுசீரமைப்பது, நீர்பிடிப்பு பகுதி பாதுகாப்பை அறிமுகம்செய்தல், மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடிநீர் இணைந்த பயன்பாடு மழைநீர் பயன்பாட்டை தக்க தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்த வேண்டும். மழைநீர் சேகரிப்பு திட்டத்தை கட்டாயம் ஆக்கவேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார். நீர்நிலை ஆதாரங்கள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் ஜெயந்தி துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை (ஆற்றுப் பாதுகாப்பு கோட்டம்) கலைச்செல்வன், உதவி செயற்பொறியாளர் திருவேட்டைசெல்வம், வளர்ச்சித் திட்ட அலுவலர் கோதைமாதேஷ்வரி, உதவி செயற்பொறியாளர்கள், முன்னோடி விவசாயிகள் ராஜாராம், சுப்பிரமணியன், குமாரசாமி உள்பட பல அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**<u>எலிகளை ஒழிக்க விவசாயிகளுக்கு பயிற்சி</u>**

ஜெயங்கொண்டம், : விவசாயிகளுக்கு, அட்மா திட்டத்தின் கீழ் எலிஒழிப்பு முறைகள் பற்றி பயிற்சி சோழமாதேவி கீரீடு வேளாண்மை அறிவியல் மையத்தில் அளிக்கப்பட்டது. அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் வேளாண்மை சாகுபடியில் நவீன தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கமளித்தார். அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜாஜோஸ்லின் பயிர்களை சேதப்படுத்தி மகசூலை பெருமளவு குறைக்கும் எலிகளை இயற்கை,வேதியியல் மற்றும் உயிரியல் முறையில்

எலிகளை ஒழிக்கும் முறைகள், எலிகளை ஒழிக்கும் பொறிகள், மற்றும் பிற உபகரணங்கள் கிடைக்கும் இடங்கள் தகவல்களை தெரிவித்தார். விரிவாக்க தொழில் நுட்ப வல்லுனர் ராஜ்கலா வேளாண்மை மற்றும் தோட்ட கலைபயிர்கள் சாகுபடியில் நவீன தொழில் நுட்பங்கள் பற்றியும், மனையியல் தொழில் நுட்ப வல்லுனர் உமாசந்திரா, சிறு தானியங்கள் சாகுபடி, தானியங்கள் சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் குறித்து விளக்கி பேசினார். தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. பயிற்சியில் உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் முருகன், சவுந்திரராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏராளமான விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

## 126 ஏக்கரில் வெங்காய சாகுபடி

ஜெயங்கொண்டம், : தத்தனூரில் 126 ஏக்கரில் வெங்காய சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலங்களில் கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார். அரியலூர் மாவட்டத்தில் முதல் முறையாக பெரிய வெங்காய சாகுபடி செய்ய தோட்டகலைத்துறை மலைபயிர்கள் துறை சார்பில் தேசிய தோட்டகலை இயக்க திட்டத்தின் கீழ் பெரிய வெங்காயம் சாகுபடி அபிவிருத்திக்காக அரியலூர் மாவட்டத்தில் ரூ.6 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரியலூர், திருமானூர், செந்துறை, தாபழூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் ஆகிய ஒன்றியங்களில் 125 விவசாயிகள்தேர்வுசெய்யப்பட்டனர்.

126 ஏக்கர் நிலபரப்பில் பெரிய வெங்காயம் சாகுபடி அறிமுகப்படுதப் பட்டது. இத்திட்டத்தின் மூலம் பெரிய வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.12ஆயிரம் மதிப்புள்ள விதை உரம், பயிர்பாதுகாப்பு மருந்து, மற்றும் சாகுபடி செலவு உட்பட பிந்தைய மானியமாக வழங்கப்படுகிறது. உடையார்பாளையம் தாலுகாவில் தத்தனூர் மருதகாசி என்பவருடைய வயலில் நாற்றங்காலை மாவட்ட

கலெக்டர் சரவணவேல்ராஜ் பார்வையிட்டு விவசாயிகள் பயனடைய வெங்காயம் சாகுபடிக்கான குறிப்புகள், நாற்றங்கால் தயாரிப்பு, விதை நேர்த்தி நிலம் தயாரிப்பு, நடவு பயிர் பாதுகாப்புகள் குறித்து விவசாயிகள் அறிந்து பயன்பெற வேண்டும் என கூறினார். பின்னர் தத்தனூர் கீழவெளி, பிலிச்சிகுழி, கல்லேரி, முத்துசேர்வாமடம், உடையார்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் தலா ரூ.2.40 லட்சம் மதிப்பில் நடைபெறும் அங்கன்வாடி கட்டிடப்பணிகள், ரூ.6.50 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி கட்டிடப்பணிகள், ரூ.8 லட்சம் மதிப்பில் பாரத பிரதமரின் சாலை மேம்பாட்டு திட்டத்தில் நடைபெறும் ஆயுதகளம்-உட்கோட்டை சாலை, ரூ.8லட்சம் மதிப்பில் இடைக்கட்டு கிராமத்தில் நடைபெறும் தாணியக்கிடங்கு பணி, ரூ.2.65 லட்சம் மதிப்பில் ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலைபள்ளி சத்துணவு சமையலறை கட்டிடம் உள்ளிட்ட பணிகளை ஆய்வு செய்தார். ஆயிவின்போது, பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மாவட்ட திட்ட இயக்குனர் சடையப்ப விநாயக மூர்த்தி, உதவி செயற்பொறியாளர் சுப்ரமணியன், ஒன்றிய பொறியாளர்கள், தோட்டகலை துறை இயக்குனர்கள், அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**<u>சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் கடலை சாகுபடிக்கு 50% மானியத்தில் ஜிப்சம் விவசாயிகளுக்கு அழைப்பு</u>**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தேசிய எண்ணைவித்து இயக்கம் சார்பில் 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் வழங்கப்படுகிறது. சேதுபாவா சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் தற்போது மார்கழி பட்டத்தில் 2 ஆயிரம் ஏக்கருக்குமேல் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற

நிலக்கடலைக்கு ஜிப்சம் இடுவதற்கு இதுவே ஏற்ற தருணம். ஒரு ஹெக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம் இடுவது அவசியாகும். ஜிப்சம் இடும்போது 200 கிலோவை அடி உரமாகவும், மீத முள்ள 200 கிலோவை 40- 45வது நாளில் பூக் கும் தருணத்தில் இட்டு களை கொத்தி பயிரை சுற்றி நன்கு மண் அணைக்க வேண் டும். ஜிப்சத்தின் மொத்த அளவில் பாதியை ரசாயன உரங்களுடன் அடி உரமாக இடுவதால் பயிரில் நூற்புழுக்களால் ஏற்படும் பாதி ப்பு மற்றும் நிலக்கடலையில் உண்டாகும் சொறி போன்ற நோய்களை வெகுவாக குறைக்க முடியும். பூச்சிநோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு சக்தி கிடைக்கும். ஜிப்சமிட்டு களை கொத்தி மண் அணைப்பதால் கால்சியம் மற்றும் கந்தகசத்து குறைபாடுள்ள நிலங்களில் நல்ல பலன் கிடைக்கும். ஜிப்சம் இடுவதால் நன்கு விழுதுகள் இறங்கி நிலக்கடலை ஊறி பொக்கற்ற- நல்ல எடை யுடன் கூடிய திரட்சியான பருப்புகள் கிடைப்பதுடன் அதிக மகசூலும் கிடைக்க செய்கிறது. தற்போது மார்கழி பட்ட நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் தேசிய வேளாண் எண்ணெய் வித்து இயக்கம் சார்பில் ஜிப்சம் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை அணுகி பரிந்துரை விண்ணப்பம் பெற்று பூக்கொல்லை வேளாண் விரிவாக்க மைய அலுவலகத்தில் ஜிப்சம் வாங்கி பயன்பெறலாம். மேலும் ஜிப்சம் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது.

**<u>திருத்துறைப்பூண்டி அருகே விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்</u>**

திருத்துறைப்பூண்டி,: திருத்துறைப்பூண்டி அருகே மேட்டுப்பாளையம் நம் பிக்கை தொண்டு நிறு வனம் ரிலையன்ஸ் அறக்கட்டளை சார்பில் உழவர்களுக்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. தொண்டு நிறுவன இயக்குநர் சௌந்தர்ராஜன் தலைமை வகித்தார். ரிலையன்ஸ் அறக்கட்டளை மேலாளர் பாலகுமார் முன்னிலை வகித்தார். மெய் கண்டன் வரவேற்றார். ஓய்வு விவசாய இணை இயக்குநர் லெக்ஷ்மி

நாராயணன் நவீன விவசாய முறை, இயற்கை விவசாயம், நெல், உளுந்து போன்றவைகளை பயிரிடுவது குறித்து விளக்கினார். கால்நடை மருத்துவர் காரைக்கால் டாக்டர் கோபி நாத் கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு, நோய்கள் குறித்து விளக்கினார். சௌந்தர்ராஜன் பேசுகையில்: விவசாயிகளை சந்தித்து விவசா யம் குறித்த சந்தேகங்களுக்கு விவசாய அலுவலர்கள், கால்நடை மருத்துவர்கள் மூலம் உரிய பயிற்சிகள் வழங்கப்படும் என்றார். மேலும் இந்த பயிற்சியில் கலந்துகொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் இயற்கை சீற்றம் குறித்த தகவல்கள் செல் போனில் கிடைக்கும் வசதி குறித்து விளக்கினார். மேலும் 18004198800 என்ற இலவச எண்ணுக்கு தொடர்பு கொண்டால் இலவசமாக அனைத்து தகவல்களும் கிடைக்கும் என்றார். மேட்டுப் பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் பரமசிவம், கூட்டுறவு வங்கி தலைவர் குமார், உழவர் மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், அப்பகுதி விவசாயிகள், உழவர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ஏற்பாடு களை நாராயணன், கிருஷ் ணன், கோகிலா, வள்ளி, இந்திராணி செய்திருந்தனர். தொண்டு நிறுவன திட்ட மேலாளர் விஜயா நன்றி கூறினார்.

**<u>திருக்கடையூர் பகுதியில் 1500 ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி</u>**

தரங்கம்பாடி, : திருக்கடையூர் சிங்காநொடை, ஆணைக்கோயில், பத்துகட்டு, காலமாநல்லூர், கிடங்கல், காழியப்பநல்லூர், அனந்த மங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் திடல்கள் அதிகம் இருப்பதால் 1500 ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 90 மற்றும் 120 நாள் வயதுடைய நிலக்கடலையை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். மழை காலங்களை தவிர்த்து மற்ற காலங்களில் நிலக் கடலை பயிரிட்டு வருகின்றனர். கடந்த மாதம் விட்டு விட்டு மழை பெய் தது நிலக்கடலை சாகுபடியாளர்களுக்கு சாதகமாக அமைந்தது.

நடப்பாண்டில் நிலக்கடலை மகசூல் திருப்திகரமாக இருக்கும் என்று நிலக்கடலை விவசாயிகள் நம்பியுள்ளனர்.